**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(28.06.2017 முதல் 02.07.2017 வரை)**
**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**
போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881

================================================================================

**தேதி:27.06.2017**

**கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (23.06.2017– 26.06.2017)**

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 1.6 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 35 – 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 29 – 30 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 61 – 73 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 - 6 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>28.06.2017 | நாள் 2<br>29.06.2017 | நாள் 2<br>30.06.2017 | நாள் 4<br>01.07.2017 | நாள் 5<br>02.07.2017 |
| மழை (மி.மீ.) | 0 | 2 | 1 | 7 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 36 | 37 | 37 | 37 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 26 | 26 | 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 8 | 8 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 40 – 60 | 40 – 60 | 45 – 64 | 45 – 64 | 45 – 64 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

24.06.2017 முதல் 28.06.2017 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை அளவு 1 – 7 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெலமற்றும் நெல் தரிசுபருத்தி**

**பருவம்: நெல் தரிசுபருத்தி: காய் பிடிக்கும்பருவம்**

- திருந்தியநெல் சாகுபடிசெய்யும் விவசாயிகள், இரண்டரைசென்ட் நிலத்தில் மேட்டு பாய் நாற்றங்காலில் 5 கிலோ இரண்டாம் கொம்பு நெல் விதையைசீராக தூவிநாற்றுவிடவும். முதல் ஐந்துநாள் வரை பூவாளிஉதவியுடன் நாற்றங்கால் நன்குநனையும்படிகாலைஅல்லதுமாலைவேளைகளில் தண்ணீர் தெளிக்கவும். ஆறாம் நாளிலிருந்துபாய் நாற்றங்காலைச் சுற்றியுள்ளவாய்க்காலில் நாற்றுப்படுகைநன்குநனையும்படிதண்ணீரைபாய்ச்சவேண்டும். நாற்றுவிட்டஒன்பதாம் நாள் மாலைவேளையில் 0.5 சத யூரியாகரைசலைதெளிக்கவும். நாற்றுபறிப்பதற்கு இரண்டுநாள் முன்பாகதண்ணீர் பாய்ச்சுவதைநிறுத்தவேண்டும். நாற்றுவிட்ட 14ஆம்நாள் நாற்றுகள் நடவிற்குதயார் ஆகிவிடும்.
- குறுவைபருவத்திற்குநாற்றங்கால் தயார் செய்யும் போதுஒருஎக்டருக்கான 20 சென்ட் நாற்றங்காலில் ஒருடன் தொழுஉரம் அல்லதுகம்போஸ்ட் இடவேண்டும். கடைசிஉழவின் போதுநாற்றங்காலுக்கு 40 கிலோடிஏபிஉரம் அடியுரமாக இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும்,ஒருகிலோ டி.ஏ.பி. ஒருசென்ட் நாற்றங்காலுக்குஎன்றஅளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களைபறிக்கஉதவும்.
- பருத்தியில் காய் புழுவின் தாக்குதல் பரவலாகதென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தஏக்கருக்கு இன்டாக்சாகார்ப் 15.8 SC 200 மி.லிஎன்றஅளவில் தெளிக்கவும்.

**கால்நடைகளுக்கு**

- தினமும் கறவைமாடுகளுக்கு 1-2 கிலோவும் மற்றகால்நடைகளுக்கு 0.5-1 கிலோவும் அசோலாகொடுக்கலாம்.
- பசுந்தீவனம் மற்றும் அடர்தீவனத்தின் அளவைபகல் நேரத்தில் அதிகரித்தும்,வைகோல் போன்றஉலர்தீவனத்தைகுறைந்தஅளவு அதிகாலைமற்றும் இரவு நேரங்களில் கொடுக்கவும்.

**இயக்குநர்**